## தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110இன் கீழ் 15–4–2010 அன்று துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் படித்தளித்த அறிக்கை.

தமிழ்நாட்டில் 2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை இயல்பான மழை அளவான 990.1 மி.மீ. மழைக்குப் பதிலாக சராசரியாக இரண்டு சதவிகிதம் அதிகமாக – அதாவது 1010.4 மி.மீ. மழை பெய்துள்ளது. இருப்பினும் ஒருசில மாவட்டங்களில் பெய்த மழை யின் அளவு குறைவாக உள்ளது. 2010ஆம் ஆண்டிலும் ஜனவரி முதல் இதுவரை தமிழ்நாட்டில் பெய்ய வேண்டிய இயல்பான மழை அளவு குறைவாகவே பெய்துள்ளது. கடுமையான கோடை வெயில் காரணமாக ஒருசில மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே அது பற்றி ஆய்வு செய்வதற்காக 14–4–2010 அன்று காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் – நானும், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை செயலாளர், மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்ட சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவி வரும் குடிநீர் தட்டுப் பாட்டை சமாளிக்கும்பொருட்டு பின்வரும் எட்டு மாவட்டங்களுக்கு முதல் கட்டமாக மொத்தம் ரூபாய் 14 கோடி நிதியை பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |
| 2. | திருவள்ளூர் மாவட்டம் | .. | ஒரு கோடி ரூபாய் |
| 3. | தர்மபுரி மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |
| 4. | சேலம் மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |
| 5. | விழுப்புரம் மாவட்டம் | .. | ஒரு கோடி ரூபாய் |
| 6. | கிருஷ்ணகிரி மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |

| | | | |
|---|---|---|---|
| 7. | வேலூர் மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |
| 8. | திருவண்ணாமலை மாவட்டம் | .. | இரண்டு கோடி ரூபாய் |

இந்த நிதியைக் கொண்டு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், தூர்வாரி கிணறுகளை ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகளை பழுது பார்த்தல் முதலிய பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இது தவிர, திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக – இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் தலா இரண்டு கோடி ரூபாய் வீதம் மொத்தம் நான்கு கோடி ரூபாய் நிதி 12–4–2010 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையும் சேர்த்து பத்து மாவட்டங்களுக்கு மொத்தம் ரூபாய் 18 கோடி பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடிநீர் தட்டுப்பாடு தொடர்பாக பிற மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு தேவையான நிதி உதவி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---